**STARTING TIME 01.06 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 29/2019**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. R. Suresh Babu, Grade-III Bench Clerk of this court, on 17.07.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **அமுதவள்ளி** Husband’s Name :

Address :

Calling : Age :

**3, 5 முதல் 7 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

19. இவ்வழக்கின் வாதி எனது தங்கை, 1–ம் பிரதிவாதி எனது அண்ணன் என்றால், சரிதான். தாவா எ–அட்டவணையில் உள்ள சர்வே எண் 282/B1–ல் உள்ள சொத்தின் விஸ்தீரணம் 70 செண்ட் என்றால், சரிதான். அந்த சொத்தை பொறுத்து என் தாயார் கடந்த 30.05.2003 அன்று என் பெயருக்கு இரண்டு தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதி வைத்தார்கள் என்றால், சரிதான். அந்த சமயத்தில் இவ்வழக்கின் வாதி மற்றும் அவரது கணவர் பாபு ஆகியோர் உடனிருந்தார்கள் என்றால், சரிதான்.

20. எனது தாயார், தங்கையான வாதி, 1–ம் பிரதிவாதி மற்றும் நான் ஆகியோர் சேர்ந்து செய்துக் கொண்ட குடும்ப ஏற்பாட்டின் பேரில் தான் எனது தாயார் என் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதி வைத்தார் என்றால், சரிதான். செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்த சமயத்தில் ரூ.50,000/–ம் பணம்

வாங்கிக் கொண்டு தான் வாதி செட்டில்மெண்ட் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்தார் என்றால், சரிதான். செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதிய அதே தேதியில் வாதி என் பெயருக்கு ஒரு சம்மதப் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால், சரிதான். அந்த சம்மதப் பத்திரத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். எனவே தாவா எ–அட்டவணையில் உள்ள 1–வது அயிட்ட சொத்தில் வாதிக்கு உரிமை எதுவும் உள்ளதா என்றால், இல்லை.

21. என் தாயார் 30.05.2003 அன்று என் பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதி வைத்த சமயத்திலேயே தாவா எ–அட்டவணையில் உள்ள 1–வது அயிட்ட சொத்தை சுவாதீனம் ஒப்படைத்துவிட்டார் என்றால், சரிதான். செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி சமயத்தில் மேற்படி ஆவணத்தை எழுதுவதற்கு வாதி ஆட்சேபனை எதுவும் தெரிவித்தாரா என்றால், இல்லை. அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சொத்தை நான் தான் அனுபவித்து என் பெயரில் பட்டா பெற்று வரியும் செலுத்தி வருகிறேன் என்றால், சரிதான்.

22. தாவா எ–அட்டவணையில் உள்ள 1–வது அயிட்ட சொத்தை நான் அனுபவித்து வந்து கடந்த 02.09.2015 அன்று 3, 5, 6, 7 பிரதிவாதிக்கு விற்பனை செய்தேன் என்றால், சரிதான். விற்பனை செய்த அதே தினம் அந்த சொத்தின் சுவாதீனத்தையும் நான் அவர்களுக்கு ஒப்படைத்துவிட்டேன் என்றால், சரிதான். அந்த சொத்தை கிரயம் பெற்ற நாளில் இருந்து 3, 5, 6, 7 பிரதிவாதிகள் அனுபவித்து வந்து பட்டா வரியும் அவர்கள் பெயரில் பெற்றுள்ளார்கள் என்றால், சரிதான். எனவே என்னிடமிருந்து கிரயம் பெற்ற சொத்துக்கு 3, 5, 6, 7 பிரதிவாதிகள் தான் உரிமையாளர்கள் என்றால், சரிதான். எனவே 3, 5, 6, 7 பிரதிவாதிகள் மேற்படி சொத்தை என்னிடமிருந்து நல்லெண்ணத்தின் பேரில் உரிய பிரதிபலனுக்கு கிரயம் பெற்றவர்கள் என்றால், சரிதான். எனவே மேற்படி சொத்தை பொறுத்து தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரிதான்.

3, 5 முதல் 7 தரப்பு பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

2–ம் பிரதிவாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME 01.22.P.M.**

**(Sd/-. G. Yuvaraj)**

**Special Subordinate Judge,**
**Special Sub Court for L.A.O.P. Cases,**
**Arakkonam.**

(Sd/-. G. Yuvaraj)
Special Subordinate Judge,
Special Sub Court for L.A.O.P. Cases,
Arakkonam.